## கீழடி அகழாய்வில் அரிதான சுடுமண் பாம்பு தலை உருவம் கண்டெடுப்பு



**திருப்புவனம்:** சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடி, கொந்தகை ஆகிய 2 இடங்களில் 9-ம் கட்ட அகழாய்வுப் பணி நடந்து வருகிறது. இதுவரை கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டன.


இங்கு ஏற்கெனவே தங்க அணிகலன், சுடுமண் காளை, ஆட்டக் காய்கள், கண்ணாடி மணிகள், செப்பு ஊசி, படிக எடைக் கல் என 200-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில் ஒரு குழியில் 190 செ.மீ. ஆழத்தில் அதிகளவில் பானை ஓடுகள் கிடைத்தன. அவற்றில் கைகள் மூலம் சுடுமண்ணால் நுட்பமாகச் செய்யப்பட்ட பாம்பின் தலை உருவம் ஒன்று இருந்தது. அது 6.5 செ.மீ. நீளம், 5.4 செ.மீ. அகலம், 1.5 செ.மீ., தடிமன் கொண்டது.

பாம்பின் கண்கள், வாய்ப் பகுதி நேர்த்தியாக செய்யப்பட்டிருந்தது. மேலும் சொரசொரப்பான மேற்பரப்பு டன் சிவப்பு நிறம் பூசப்பட்டிருந்தது. இத்தகவலை தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.

EVA STALIN IAS ACADEMY

## சந்திரயான்-3 சுற்றுப்பாதை அடுத்த நிலைக்கு மாற்றம்




**புதுடெல்லி:** நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. அதன்பிறகு பூமியை வலம்வந்த விண்கலத்தின் சுற்றுப்பாதை தூரத்தை அதிகரித்து, ஆக. 1-ம்தேதி புவியீர்ப்பு விசையில் இருந்து சந்திரயான்-3 விலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லும்படி அதன் பயணப்பாதை மாற்றப்பட்டது.

5 நாள் பயணத்துக்கு பிறகு ஆக.5-ம் தேதி நிலவின் வட்டச் சுற்றுப்பாதைக்குள் சந்திரயான்-3 நுழைந்தது. தொடர்ந்து நிலவின் சுற்றுப்பாதை உயரத்தை படிப்படியாக சுருக்கி விண்கலத்தை மெதுவாக தரையிறக்குவதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அதன்படி சந்திரயான் பயணப்பாதை 6-ம் தேதி மாற்றியமைக்கப்பட்டது. 2-வது கட்டமாக நேற்று மதியம் 1.30 மணிக்கு திரவ வாயு இயந்திரம் இயக்கப்பட்டு விண்கலத்தின் சுற்றுப்பாதை வெற்றிகரமாக மாற்றப்பட்டது. தற்போது குறைந்தபட்சம் 174 கி.மீ., அதிகபட்சம் 1,437 கி.மீ. தொலைவு கொண்ட நிலவு வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் வலம் வருகிறது.

**கேரளம்' என பெயர் மாற்ற சட்டப்பேரவையில் தீர்மானம்**

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 8-வது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் கேரள மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என மாற்ற மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை அம்மாநில சட்டப்பேரவையில் முதல்வர் பினராயி விஜயன் நேற்று கொண்டுவந்தார்.

தீர்மானத்தை சட்டப்பேரவையில் அறிமுகம் செய்து அவர் பேசியதாவது: மலையாளத்தில் 'கேரளம்' என்ற பெயரிலும், பிற மொழிகளில் 'கேரளா' என்ற பெயரிலும் நமது மாநிலம் அழைக்கப்படுகிறது. ஆனால், நமது மாநிலத்தின் பெயர் அரசியலமைப்பு சட்டத்தின் முதல் அட்டவணையில் 'கேரளா' என்றே எழுதப்பட்டுள்ளது. எனவே, அரசியலமைப்பின் 3-வது பிரிவின்கீழ் இதை 'கேரளம்' என்று திருத்தம் செய்து உடனடி பெயர் மாற்றத்துக்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமாறு இந்த பேரவை ஒருமனதாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. அரசியலமைப்பின் 8-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என இடம்பெறச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். பின்னர், இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**"EG.5" - அமெரிக்கா, பிரிட்டனில் வேகமாகப் பரவும் கரோனா வைரஸின் புதிய திரிபு: WHO தகவல்**

**நியூயார்க்**: உலகம் முழுவதும் கரோனா வைரஸின் தாக்கம் படிப்படியாக குறைந்து வந்த சூழலில் தற்போது அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் EG.5 என்ற புதிய திரிபு பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசஸ் கூறுகையில், "அமெரிக்கா மற்றும் பிரிடனில் EG.5 என்ற புதிய கரோனா திரிபு பரவி வருகிறது. இந்த புதிய திரிபு அபாயகரமானதாக திடீரென தொற்று பரவலையும் உயிர்ப்பலிகளையும் அதிகரிக்கக் கூடியதாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்படுகிறது. இது தொடர்பாக இன்று அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

இந்தச் சூழலில் உலக நாடுகள் கரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை, மரபணு பகுப்பாய்வு விவரங்களை உடனுக்குடன் உலக சுகாதார நிறுவனத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். குறிப்பாக உயிர்ப்பலி ஏதும் இருந்தால் அதுபற்றிய விவரமும், வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் உபாதைகள் தொடர்பான விவரங்களையும் அளிக்க வேண்டும். அது மட்டுமல்லாது தொடர்ந்து தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றார்.

**கம்பன் விழா சென்னையில் நாளை தொடக்கம்**

**சென்னை:** சென்னை கம்பன் கழகம் சார்பில், 49-வது கம்பன் விழா மயிலாப்பூரில் நாளை (ஆக.11) தொடங்கி 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக, சென்னையில் கம்பன் கழக துணைத் தலைவர் நல்லி குப்புசாமி, இணைச் செயலாளர் சாரதா நம்பி ஆரூரன், பொருளாளர் மு.தருமராசன் ஆகியோர்செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழை வளர்க்கவும், தமிழரின் பண்பாட்டை விளக்கவும் நமக்குக் கிடைத்த இலக்கியம் கம்பராமாயணம்.

தூய தமிழில் பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டி தனித்தமிழுக்குப் பெருமை சேர்த்த கம்பராமாயணப் பாடல்களையும் கருத்துகளையும் மக்களிடம் விளக்கும் விழாகம்பன் விழா. அந்த வகையில், சென்னை கம்பன் கழகம் சார்பில், 49-ம் ஆண்டு கம்பன் விழா மயிலாப்பூர் ஏவிஎம் கல்யாண மண்டபத்தில் ஆக.11 முதல் ஆக.13-ம் தேதி வரை3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கம்பன் விழாவின் முதல் நாளான 11-ம் தேதி மாலை தொடங்கும் விழாவுக்கு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் தலைமை ஏற்கிறார். கலை, இலக்கியத் துறைகளில் புகழுடன் விளங்கும் 16 பேருக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரை சென்னைக்குவரவழைத்து, திருக்குறள், சிலப்பதிகாரம், சீறாப்புராணம், கம்பராமாயணம், பெரிய புராணம், சீவகசிந்தாமணி ஆகிய 6 இலக்கியங்களில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, ஒப்பித்தல் போட்டி,

கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ,மாணவிகளுக்கு இந்த விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

இந்த ஆண்டு கம்பன் விழா கம்பனின் மானுட மேன்மைகள் என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும். வரும் 12-ம்தேதி காலையில் தனியுரை, நால்வர் உலா, கவியரங்கமும் மாலையில் நயவுரை, மகளிர் சோலைஎன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. வரும் 13-ம் தேதி காலையில் இயலுரை, இன்னுரை, வழக்காடு மன்றம், மாலையில் எழிலுரை, பட்டிமன்றம் உட்பட பல நிகழ்வுகளும் நடைபெறும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 6.7 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்ட இந்தியாவுக்கு 6.7 சதவீத வளர்ச்சி அவசியம்

**புதுடெல்லி:** எஸ் &பி குளோபல் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொருளாதார வளர்ச்சியில் தற்போது அமெரிக்கா 26 டிரில்லியன் டாலருடன் முதலிடத்திலும், சீனா 19 டிரில்லியன் டாலருடன் 2-வது இடம், ஜப்பான் 4.4 டிரில்லியன் டாலருடன் 3 வது இடம், ஜெர்மனி 4.3 டிரில்லியன் டாலருடன் 4-வது இடம், இந்தியா 3.7 டிரில்லியன் டாலருடன் 5-வது இடத்திலும் உள்ளன.

தற்போது சர்வதேச அளவில் காணப்படும் சுணக்கமான சூழல் உலக நாடுகளின் வேகத்துக்கு தடைக்கல்லாக மாறியுள்ளது. இந்த நிலையில், இந்தியாவில் வட்டி விகிதம் அதிகமாக இருப்பது பிரச்சினையின் வேகத்தை தீவிரமாக்கியுள்ளது. இதுபோன்ற இடர்பாடுகளை அரசு மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியவை சரியான முறையில் அணுகி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

கடந்த 2008-ம் ஆண்டு 5.36 சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் தற்போது 7.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.

எனவே, தொழில் நடவடிக்கைகளை ஊக்குவித்து அவற்றின் பங்கை அதிகரிக்கும் வகையில் கொள்கைகளை வகுப்பதுடன், உலக சந்தையில் போட்டியிடும் அளவில் இந்தியாவின் தனித்தன்மையை அதிகரிக்க வேண்டும்.

ஆண்டுக்கு சராசரி 6.7 சதவீத பொருளாதார வளர்ச்சியை தக்க வைக்கவேண்டும். அப்போதுதான் இந்தியாவின் 6.7 டிரில்லியன் டாலர் கனவு நனவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருடுபோன செல்போனை கண்டுபிடிக்க புதிய இணையதளம் தொடக்கம்

**சென்னை**: திருடுபோன செல்போன்களை விரைந்து கண்டுபிடிக்க வசதியாக புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

தொலைந்து போன அல்லது திருடு போன செல்போன்களை பிளாக் செய்து அவற்றை டிராக் செய்ய அகில இந்திய அளவில் ஒரு கண்காணிப்பு அமைப்பை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இதற்காக சிஇஐஆர் - அதாவது மத்திய உபகரண அடையாளப் பதிவு தொழில்நுட்ப அமைப்பு அண்மையில் தொடங்கப்பட்டது.

திருடப்பட்ட / தொலைந்த செல்போன்கள் குறித்து அதன் உரிமையாளர்கள் இதில் புகாரை பதிவு செய்தால் 24 மணி நேரத்தில் சம்பந்தப்பட்ட செல்போனின் செயல்பாடு முடக்கப்படும். அதன்பின்னர், அந்த செல்போனில் வேறு யாரேனும் சிம்கார்டு போட்டால் அது குறித்த தகவல், லைவ் லொக்கேஷன் சைபர் கிரைம் போலீஸாருக்கு தெரிந்துவிடும். இதை அடிப்படையாக வைத்து செல்போனை வைத்திருப்பவரின் இருப்பிடம் அறிந்து போலீஸாரால் நடவடிக்கை எடுக்க முடியும்.

இதற்கான ‘லாகின்’ தமிழக சைபர் கிரைம் போலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அனைத்து காவல் நிலைய போலீஸாருக்கும் வழங்கப்படும். இனி புகார் அளித்தவர்கள் அதன் பிறகு தமிழகத்தில் உள்ள அவர்கள் வசிக்கும் எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் சிஎஸ்ஆர்

அல்லது எப்ஐஆர் பெற்றுக் கொள்ளலாம். இதையடுத்து மீட்கப்படும் செல்போன்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க இது உதவியாக இருக்கும் என தமிழக சைபர் கிரைம் பிரிவு கூடுதல் டிஜிபி சஞ்சய் குமார் தெரிவித்தனர்.

EVA STALIN IAS ACADEMY